பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 23 வெள்ளிக்கிழமை 08.07.2022 கதிர் 135

## துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பியோடிய ‘மொட்டு’ எம்.பி.

### பொலிஸார் தீவிர விசாரணை



சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லலித் வர்ணகுமார, வானத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் பொலிஸார் ☞2



## கொழும்பில் படைகள் குவிப்பு

கொழும்பில் இன்று அதிகாலை முதல் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டா உடன் வீட்டுக்குப் போ என்ற கோஷத்துடன் நாளை அரசுக்கு எதிராகக் கொழும்பில் மாபெரும் போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்நிலையிலேயே கொழும்பில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினரின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் ஏனைய பகுதிகளிலும் நாளை ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ☞2

# அமைதியான போராட்டக்காரரை அரச படைகள் அடக்கவேகூடாது!

### பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று அமெரிக்கத் தூதர் ‘ருவிட்’

அமைதியான போராட்டக்காரர்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் இடமளிக்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று நினைவூட்டுகின்றேன்.

– இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் கோரிக்கை விடுத்துள்ளார். ☞2



## ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ சுட்டுக் கொலை!

(விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்)



## கோட்டாவுக்குத் தக்க பாடம் புகட்ட நாளை சகலரும் அணிதிரள்வோம்

### தமிழ் முற்போக்குக் கூட்டணி அழைப்பு

நாட்டின் எதிர்காலம் கருதி நாளை 9ஆம் திகதி அனைவரும் ஓரணி சேர்வோம். மக்களை வதைக்கும் சக்திகளுக்கு ஒற்றுமையால்தக்கபாடம்புகட்டுவோம்.

-இவ்வாறுதமிழ்முற்போக்குக் கூட்டணியின் இணைத் தலைவரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான ☞2




## மிகப் பிரபலமான கட்சியே ஜே.வி.பி.

### ஊடகவியலாளர்கள் முன்னிலையில் அமெரிக்கத் தூதுவர் அதிரடிக் கருத்து



இலங்கையைப் பொறுத்த வரை ஜே.வி.பி. ஒருபாரியபிரசன்னத்தைக் கொண்ட பிரபலமான ஒரு கட்சியாகும் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்தார்.

நேற்று ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு ஒன்றின்போது ☞2

## கோட்டா உடன் விலக வேண்டும்

### - இலங்கைத் திருச்சபையும் வலியுறுத்து

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாகப்பதவிவிலகவேண்டும்என்றுஇலங்கைத் திருச்சபை வலியுறுத்தியுள்ளது. இலங்கை மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் ☞2


## மேலும் 3 நிறுவனங்கள் அமைச்சர் தம்மிக்க வசம்

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இருந்த 3 நிறுவனங்கள் முதலீட்டு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, ரக்னா லங்கா நிறுவனம், செலந்திவ முதலீட்டு நிறுவனம் மற்றும் ☞2

## என்னை விமர்சித்த தம்மிக்கவிடமிருந்து அமைச்சுப் பதவியை உடனே பறிக்கவும்!

### கோட்டாவிடம் ரணில் வலியுறுத்து



அமைச்சரவை மரபுகளை மீறி தன் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்த தம்மிக்க பெரேராவை அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார் ☞2

### இலங்கை அரசியல் களத்தில்

## எதிர்வரும் நாள்களில் அதிரடி மாற்றங்கள்?

இலங்கையில் அடுத்த சில நாள்களுக்குள் முக்கிய அர சியல் மாற்றங்கள் ஏற்படவுள் ளன என்று அரசியல் வட்டாரங் களில் இருந்து அறியமுடிகின்றது. அதற்கான பேச்சுகள் தற்போது வெற்றிகரமாக இடம்பெற்று ☞2

## எரிபொருள் நிலைய மோதலில் இளைஞர் ஒருவர் படுகொலை!

### மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருந்த இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் காலியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. எரிபொருளைக் கொள்வனவு ☞2

## கோட்டா உடன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நம்பிக்கையை மீளப் பெறக்கூடிய உண்மையான பிரதிநிதித்துவ இடைக்கால நிர்வாகத்தை உருவாக்க வேண்டும் என்றும் இலங்கைத் திருச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் கொண்டு சென்றமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் என்றும் இலங்கைத் திருச்சபை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

ஒருவர் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைத்திருந்தால் மட்டுமே அவரின் பதவிக் காலம் முறையானதாக இருக்கும் என்பதை ஜனாதிபதி நினைவில் வைத்திருக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## எரிபொருள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்வதற்காகத் தமது காரில் பிரவேசித்த நபர் ஒருவர், தனது நண் பரின் வர்த்தக நிலையத்துக்கு முன்பாக இருந்த சிறிய இடைவெளியினூடாக எரிபொருள் வரிசைக்கு நடுவே குறிந்த காரை நுழைக்க முயன்றுள்ளார்.

அதன்போது, வரிசையில் காத்திருந்தவர்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ஹபராதுவ - யடகல பகுதியைச் சேர்ந்த 25 வயதான நபரே பலியானார்.

படுகாயமடைந்த மூவரும் காலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## என்னை விமர்சித்த ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இது தொடர்பான தனது நிலைப்பாட்டை பிரதமர், ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், உரிய திட்டம் இல்லை எனவும், நிதி அமைச்சர் பதவியில் இருந்து அவர் விலக வேண்டும் எனவும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் பிரதமர் நேற்று வலியுறுத்தியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

## மேலும் 3 ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹோட்டல் டெவலப்பர்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம் என்பன முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா செயற்படுகின்றார்.

## எதிர்வரும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருகின்றன எனவும், அரச உயர் பதவிகளில்கூட மாற்றம் இடம்பெறக் கூடும் எனவும் மேற்படி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கான பேச்சுகளை எதிரணிகள் வெற்றிகரமாக முன்னெடுத்துவரும் சூழ்நிலையிலேயே இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது எனவும் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

## கோட்டாவுக்குத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பழனி திகாம்பரம் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாளை நாடெங்கும் நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் தனது முகநூல் பக்கத்தில் திகாம்பரம் எம்.பி. இவ்வாறு பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார்.

## துப்பாக்கிச்சூடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீவிர விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

களுத்துறை, ஹொரணை - ஹங்குருவாதொட பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றிரவு வழிபாட்டு நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இதில் பங்கேற்றவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். அதன்பின்னர் வானத்தை நோக்கி சூடு நடத்திவிட்டு அவர் தப்பிச் சென்றுள்ளார்.

## கொழும்பில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிராகப் போராட்டங்கள் இடம் பெறவுள்ளன. இதனால் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசபடைகள் உஷார்நிலையில் வைத்துள்ளன.

## மிகப் பிரபலமான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் அண்மையில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பியைச் சந்தித்தமை தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இந்தச் சந்திப்பை அடுத்து ஜே.வி.பியுடன் நல்ல புரிதல் உள்ளது என்பதை அறிந்தேன். ஜே.வி.பி பொருத்தமான அரசியல் கட்சியாகும் - என்றார்.

தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## அமைதியான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக நாளை கொழும்பில் மாபெரும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், முக்கிய இடங்களில் பொலிஸாரும், படையினரும் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக சமூக ஊடகங்களில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்கத் தூதுவர் தனது டுவிட்டரில்,

வன்முறை ஒருபோதும் தீர்வாகாது. நீங்கள் போராட்டம் நடத்தப் போகின் றீர்கள் என்றால், தயவு செய்து அமைதியாக நடந்துகொள்ளுங்கள்.

மேலும், அமைதியான போராட்டக்காரர்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் இடமளிக்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று நினைவூட்டுகின்றேன்.

குழப்பமும், பலப்பிரயோகமும் தற்போதைய நிலையில் இலங்கையர்களுக்குப் பொருளாதாரம் அல்லது அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வராது - என்று பதிவிட்டுள்ளார்.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுமந்திரன் கேட்ட கேள்வி

தற்போதைய நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்து ஆராய அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனம் கொழும்பு நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடத்திய கூட்டத்தில் உரையாற்றிய தமிழ் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தென்னிலங்கைத் தரப்புகளிடம் நாக்கை பிடுங்குகின்ற மாதிரி சில கேள்விகளைஎழுப்பி இருக்கின்றார்.

தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் தம்மிடம் எழுப்பும் நியாயமான கேள்விகள் இவை என்ற விவரத்துடன் அவர் இந்த வினாக்களை முன் வைத்திருந்தார். இந்த பத்தியில் நாம் திரும்பத் திரும்ப முன்னர் முன்வைத்த கேள்விகள்தான் அவை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் 69 லட்சம் வாக்குகளை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அளித்து, அவருக்குப் பெருவெற்றியை வாங்கிக் கொடுத்தனர் நாட்டின் மக்கள். அதேபோல பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அவரது அரசுக்கு நாடாளுமன்றத்தில் வழங்கினர் மக்கள். இப்போது இரண்டு வருடங்களுக்குள் நிலைமை மாறி விட்டது. அதே மக்கள் அவரையும் அவரது அரசையும் வெளியேறுமாறு ஒற்றைக் காலில் நிற்கின்றனர். இது எப்படி நேர்ந்தது? 2019 நவம்பரிலும், 2020 ஒகஸ்டிலும் இந்தத் தேர்தல்களில் வாக்களித்த போது இந்த மக்களுக்கு இந்த ஆட்சி முறைமை குறித்து – இந்த ஆட்சியாளர்களின் ஊழல், மோசடிகள் குறித்து – எதுவும் தெரியாதா? அப்படி இருக்கையில் இந்த நாட்டு மக்கள்ஏன்அந்தத்தேர்தல்களில்அப்படிவாக்களித்தனர் என என் மக்கள் கேட்கும் கேள்விகளை உங்களிடம் கேட்க எனக்கு உரித்து உண்டு என சுமந்திரன் அங்கு தெரிவித்தார்.

நீதி வேண்டிய காலிமுகத் திடல் போராட்டம் இந்த ஏப்ரலில் தொடங்கப்பட்டது அல்ல. சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, சரியாக 66 ஆண்டுகளுக்கு முன்னர், 1956 ஜூலை ஐந்தாம் திகதி, நீதி வேண்டி, சம உரிமை கேட்டு, இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர்கள் இதே காலிமுகத் திடலில்தான் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினர். அப்போதுதான் இந்தத் திடலில் போராட்டம் ஆரம்பமானது. அது வன்முறை மூலம் அடக்கப்பட்டது. நமது தலைவர்கள் மோசமாகத் தாக்கப்பட்டு பேராவாவியில் தூக்கி வீசப்பட்டனர். நீதி வேண்டி – சம உரிமை கேட்டு – நியாயம் தேடி – அப்போது இங்கு நாங்கள் போராடிய போது நீங்கள் யாரும் எங்களுடன் நிற்கவில்லை. இப்போதைய பெரும் குரல் எதுவுமே அப்போது கேட்கவில்லை.

அதற்குக் காரணம் ஒன்றுதான். பெரும்பான்மை வாதமும் இனவாதமும் – ஒரே சொல்லில் கூறுவதானால் பேரினவாதம்தான் – இந்த நாட்டின் பிரச்சினைக்கு ஒரே காரணம்.

நீங்கள் எல்லோரும் சேர்ந்து கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இந்தப் பெருவெற்றியைக் கொடுத்தபோது அவர் ஓர் அப்பட்டமான இனவாதி – வெளிப்படையான இனவாதி – என்று தெரியாமலா அதைச் செய்தீர்கள் என்று எமது தமிழ் மக்கள் தென்னிலங்கை மக்களைப் பார்த்துக் கேள்வி எழுப்புகின்றனர். அது என்ன இப்போது உங்கள் வயிறுகள் வெறுமையான போது, உங்கள் வீட்டு காஸ் சிலிண்டர்கள் காலியான போது, உங்கள் வாகனங்களுக்கு எரிபொருள் கிட்டாத போது, உங்கள் 'பொக்கட்' கடிக்கின்ற போது மட்டும் கோட்டாபய ஒரு முழு இனவாதி என்று உங்களுக்குத் தெரிகின்றது? நாளை இவையெல்லாம் தாராளமாக உங்களுக்கு மீளக் கிடைத்து, விலைவாசியும் இறங்கி விட்டால், தென்னிலங்கை மக்களாகிய நீங்கள் மீண்டும் இனவாதத்தில் மூழ்கி விட மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? – என்று தமிழ் மக்கள் வினவுகின்றனர் என அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் கேள்விகள் எழுப்பினார்.

இந்த கேள்விகளுக்குப் பதில் காண்பதன் மூலமே ஒட்டு மொத்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும் என்ற நிலைப்பாடு சுமந்திரனுடையது மட்டுமல்ல, முழு ஈழத் தமிழினத்தினதும் நிலைப்பாடுதான்.

# இலங்கைக்கு உதவும் எண்ணம் எம்.சி.சிக்கு தற்போது இல்லை!



## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கைக்கு உதவும் வகையில் மிலேனியம் செலஞ்ச் கோர்ப்பரேஷன் நிறுவனத் திடம் (எம்.சி.சி.) இருந்து தற்போது எந்த நிதியுதவி ஏற்பாடுகளும் இல்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஏற்கனவே மேற்படி திட்டத்தை இலங்கைக்கு வழங்கியபோதும் அதனை ஏற்றுக்கொள்ளாதமை ஏமாற்றமளித்தது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தூதர் ஜூலி சுங் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் எப்போதாவது இந்த நிதியுதவி திட்டம் இலங்கைக்கு வழங்கப் படலாம் என்றும் எனினும் தற்போதைக்கு எந்த நிதியுதவி ஏற்பாடுகளும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுற்றுலாத்துறையை மீட்பதற்கு 5 நகரங்களில் வீதி நிகழ்ச்சிகள்

## ஹரின் பெர்னாண்டோ திட்டம்



நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு அதிக வெளிநாட்டு நாணயத்தை கொண்டு வரும் முயற்சியாக ஐந்து முக்கிய இந்திய நகரங்களில் இலங்கை வீதி நிகழ்ச்சிகளை நடத்தும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஸ்திரமற்றதன்மை உள்ளபோதும் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கைக்கு 61 ஆயிரத்து 951 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளனர் எனவும் அவர்களில் அதிகமானோர் இந்திய சுற்றுலாப் பயணிகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இந்தியர்களை அழைத்து வருவதில் அரசாங்கம் ஆர்வமாக உள்ள தென்றும் இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர வேண்டுமானால் இலங்கைக்கு சுற்றுலாத்துறையின் மூலம் வருமானம் கிடைக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அது இன்றியமையாதது என்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்தியா எங்களுக்கு மிக முக்கியமான சந்தை என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரித்தானியா உட்பட சில நாடுகள் இலங்கைக்கு அத்தியாவசியப் பயணங்களை மட்டுமே மேற்கொள்ளுமாறு குடிமக்களைக் கேட்டுக்கொண்ட போதிலும் கடந்த ஆண்டு 2 லட்சத்துக்கும் குறைவான சுற்றுலாப் பயணிகளே வந்திருந்த நிலையில், இந்த வருட இறுதிக்குள் நாடு 10 லட்சம் சுற்றுலாப் பயணிகளை உள்வாங்கும் என நம்புகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

மலைகள், அழகிய கடற்கரைகள் மற்றும் ஒதுங்கிய கடலோர நகரங்களுக்கு பெயர் பெற்ற இலங்கை, ஏழு தசாப்தங்களில் மிக மோசமான நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. பொருளாதார முறைகேடு மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுநோயால் அதன் இலாபகரமான சுற்றுலாத் துறையை அழித்துவிட்டது.

2 கோடியே 20 லட்சம் மக்கள் வாழும் நாட்டில் அத்தியாவசியப் பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய போதுமான வெளிநாட்டு நாணயம் இல்லாமல், மருந்து, உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் 80 பேரின் சொத்துக்களை முடக்க ஏற்பாடு!

பாரியளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வரும் 80 பாதாள உலக குற்றவாளிகளின் சொத்துக்களை முடக்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்ட விரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவினரால் இதுதொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த 80 பேரில் பலரும் நாட்டை விட்டு வெளியேறி தற்போது வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் இவர்கள் தொடர்பில் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட 32 குற்றவாளிகளின் சொத்துக்கள் ஏற்கனவே முடக்கப்பட்டுள்ளன எனவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு முடக்கப்பட்டுள்ள அதிகளவான சொத்துக்கள் தெமட்டகொட சமிந்த என்ற குற்றவாளிக்குச் சொந்தமானது எனவும் அவருக்கு 60 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்து இருப்பதாகவும் கூறப்படுகின்றது. பாதாள உலக போதைப்பொருள் வியாபாரிகளின் சுமார் 100 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் இதுவரையான விசாரணைகள் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

எதிர்காலத்தில் அந்த சொத்துக்களையும் முடக்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்து சேர்ப்போர் தொடர்பில் விசாரணை செய்யும் பிரிவு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ சுட்டுக் கொலை!

## தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை



ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்று காலை துப்பாக்கிச் சூட்டில் படுகாயம் அடைந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த அவர், பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். 67 வயதான ஷின்சோ அபே, 2012 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஜப்பானின் பிரதமராகப் பணியாற்றினார். கடந்த 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் உடல்நிலை காரணமாக தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

ஜப்பானில் நாடாளுமன்ற மேல் சபைக்கு நாளைமறுதினம் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலுக்கு இன்னும் 2 நாள்களே இருக்கும் நிலையில் ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். அந்நாட்டின் நரா என்ற நகரத்தில் இன்று காலை மக்களுடன் அவர் உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் மீது திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற ஒரு நபர் தான் மறைத்துவைத்திருந்த துப்பாக்கியைக் கொண்டு ஷின்சோ அபே மீது சுட்டார். அவரின் முதுகுப் பக்கம் துப்பாக்கிச் சன்னம் பாய்ந்தது.

இதனால், அவர் இரத்த வெள்ளத்தில் சுருண்டு விழுந்தார். அதையடுத்து, அங்கு பணியில் இருந்த பாது காப்புப் படையினர் படுகாயமடைந்து மயங்கிய நிலையில் இருந்த ஷின்சோ அபேவை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு சென்றனர். அங்கு ஷின்சோ அபேக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும், அவர் சிகிச்சை பலனின்றி இன்று பிற்பகல் உயிரிழந்தார்



## பிறப்பு விகிதம் குறைந்த நிலையில் சீனர்களின் ஆயுள்காலம் உயர்வு

உலகிலேயே அதிக மக்கள் தொகையை கொண்ட நாடான சீனாவில் இப்போது குழந்தைகள் பிறப்பு விகிதம் வெகுவாக குறைந்துள்ளது. கடந்த 2016ம் ஆண்டு, தம்பதியர் 2 குழந்தைகள் பெற்றுக்கொள்ள அனுமதி அளித்தும் நிலைமையில் பெரிதான மாற்றம் இல்லை. கடந்த ஆண்டு, தம்பதியர் 3 குழந்தைகள் பெற்றுக்கொளளவும் அனுமதி தந்து சட்டதிருத்தம் செய்யப்பட்டது. இந்த நிலையில் அங்கு வாழ்கிற மக்களின் ஆயுள் காலம் 0.6 ஆண்டு அதிகரித்து 77.93 ஆண்டுகளாகி இருக்கிறது. கடந்த 2020ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்புபடி சீனாவில் 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கை 26 கோடியே 40 லட்சமாக உள்ளது. சீனாவின் அங்கமாக உள்ள திபெத்தில் உயரமான நிலப்பரப்பு காரணமாக ஒட்சிசன் அளவு குறைவாக உள்ளதால், அங்கு மக்களின் ஆயுள்காலம் 1951ல் 35.5 ஆண்டுகளாக இருந்தது. தற்போது அது 72.19 ஆண்டுகளாக இருக்கிறது.

## 9 ஆவது குழந்தைக்கு தந்தையான எலான் மஸ்க்



உலகின் முன்னணி பணக்காரரான எலான் மஸ்க் தனது நிறுவனத்தில் பணிபுரியும் ஷிவோன் சிலிஸ் என்ற பெண் அதிகாரியுடன் உறவில் இருந்து இரட்டை குழந்தைகளுக்கு தந்தையாகி உள்ளார். அவருடைய முதல் மனைவியான கனடாவைச் சேர்ந்த எழுத்தாளர் ஜஸ்டின் வில்சன், எலாஸ் மஸ்க்கின் மூலம் ஐந்து குழந்தைகளை பெற்றுள்ளார்.

பின்னர் கனடாவைச் சேர்ந்த பாடகி கிரிமிஸ் மூலம் இரு குழந்தைகளை பெற்றுள்ளார். இந்த நிலையில், இந்த தம்பதியினருக்கு கடந்த நவம்பர் மாதம் இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன. இந்த இரட்டையர்களையும் சேர்த்து எலான் மஸ்க்கிற்கு மொத்தம் தற்போது 9 குழந்தைகள் உள்ளன. இது குறித்து பலர் அவரிடம் சமூகவலைத்தளங்கள் வாயிலாக பல கேள்விகளை எழுப்பி வந்தனர். இந்த நிலையில் அந்த கேள்விகளுக்கு பதில் அளிக்கும் விதமாக எலான் மஸ்க் டுவிட்டரில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார். அதில், குறைந்த மக்கள்தொகை நெருக்கடிக்கு உதவ என்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறேன். பிறப்பு விகிதம் வீழ்ச்சியடைவது நாகரிகம் இதுவரை எதிர்கொள்ளாத மிகப்பெரிய ஆபத்து என தெரிவித்து உள்ளார். ஏற்கனவே இவர் சீனாவின் மக்கள்தொகை வீழ்ச்சி குறித்து எச்சரித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்துடனான உறவு தொடருமாம் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உறுதி



பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் மீது தொடர்ச்சியாக ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்பட்ட நிலையில், அமைச்சர்கள் உள்ளிட்ட 50க்கும் மேற் பட்ட எம்.பிக்கள் அவரது அமைச்சரவையில் இருந்து வெளியேறினர்.

இதனால் பெரும்பான்மை ஆதரவை இழந்ததால் போரிஸ் ஜான்சன், பதவியை ராஜினாமா செய்தார்.

கட்சியின் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை போரிஸ் ஜான்சன் பிரதமராக நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பிரிட்டன் அரசுடன் தொடர்ந்து நெருக்கமான ஒத்துழைப்பை வழங்க ஆவலுடன் இருக்கிறேன் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் ராஜினாமா அறிவித்துள்ளமைதொடர்பாகஅறிக்கைவெளியிட்ட ஜோ பைடன், பிரிட்டனும், அமெரிக்காவும் நெருங்கிய நண்பர்கள் மற்றும் நட்பு நாடுகள் என்றார். எங்களுக்கு இடையிலான சிறப்பான உறவுவலுவாகநீடித்ததாகஅவர்குறிப்பிட்டுள்ளார். உக்ரைன் மக்களுக்கான ஆதரவு, உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் அமெரிக்காவும் பிரிட்டனும் தொடர்ந்து இணைந்து செயல்படும் என்றும் ஜோ பைடன் கூறியுள்ளார்.

## பாமாயில் ஏற்றுமதியை அதிகரிக்க வரியினைக் குறைப்பதற்கு முடிவு



உலகின் தலைசிறந்த சமையல் எண்ணெய் ஏற்றுமதியாளரான இந்தோனேசியா, பாமாயில் வரியை குறைக்கலாம் என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொருள்களின் ஏற்றுமதிக்கு முந்தைய தடை காரணமாக உள்நாட்டு கையிருப்பு, அதிகரித்தது. உலகின் முன்னணி பாமாயில் உற்பத்தியாளரான Reut Indonesia ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான ஒரு வழியாக அதன் பாமாயில் ஏற்றுமதி வரியை குறைக்கக் கூடும் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

## ஆப்கானிஸ்தான் மண்ணில் இருந்து தாக்குதல் நடத்த யாருக்கும் அனுமதியில்லை என்கிறார் தலிபான் தலைவர்

இந்தியாவின் அண்டை நாடான ஆப்கானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. இந்தநிலையில் தலிபான் அரசின் தலைவரான ஹிபெதுல்லா அக்ஹண்டாஸ்டா ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசினார்.

இதன்போது அவர் கூறியவை வருமாறு ஆப் கானிஸ்தான் மண்ணில் இருந்து பிற நாடுகள் மீது தாக்குதல் நடத்த நாங்கள் யாரையும் அனுமதிக்க மாட்டோம். இந்த உறுதிமொழியை ஆப்கானிஸ்தானின் அண்டை நாட்டினருக்கும், பிராந்தியத்திற்கும், உலகத்திற்கும் நாங்கள் அளிக்கிறோம். அதேவேளையில் எங்கள் நாட்டின் உள்விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடக்கூடாது என்று எதிர்பார்க்கிறோம். பரஸ்பர தொடர்பு தூதரகம், பொருளாதாரம் மற்றும்அரசியல்உறவுகள்உள்ளிட்டவற்றில் அமெரிக்கா உள்பட உலக நாடுகளுடன் நல்ல முறையில் தொடர விரும்புகிறோம். கல்வியில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளுக்கான மத மற்றும் நவீன படிப்புகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கல்வியை மேம்படுத்த கடினமாக உழைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.





# பிரிட்டிஷ்காரர்கள் உருவாக்கிய கல்வி முறை இந்தியக் கல்வி முறையாக இருக்க முடியாது

## பிரதமர் மோடி கருத்து

உத்தரப் பிரதேச மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, வாரணாசில் தேசிய கல்விக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான அகில இந்திய கல்வி மாநாட்டை தொடங்கி வைத்தார். மூன்று நாள்கள் நடைபெறும் இந்தக் கல்வி மாநாட்டில், தேசிய கல்விக்கொள்கையின் கீழ் அடையாளம் காணப்பட்ட 9 அம்சங்கள் குறித்து குழு விவாதங்கள் நடைபெறுகின்றன. ஆரம்பநிகழ்ச்சியில் உரையாற்றிய இந்தியப் பிரதமர், தேசியக் கல்விக்கொள்கையின் அடிப்படை அம்சமே, கல்வியை குறுகிய மனப்பான்மையிலிருந்து வெளிக்கொண்டு வருவதோடு, 21ஆம் நூற்றாண்டுக்கான நவீன சிந்தனைகளுடன் இணைப்பது தான் என்று தெரிவித்திருக்கிறார். பிரிட்டிஷ்காரர்களால் உருவாக்கப்பட்ட கல்வி முறை ஒருபோதும் இந்தியக் கல்வி முறையாக இருக்க முடியாது என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

நமது கல்வி முறை இளைஞர்களை பட்டதாரிகளை மட்டும் உருவாக்காமல், நாடு முன்னோக்கிச் செல்வதற்கு உதவுபவர்களாக இருக்கும் வகையில் இளையவர்களை உருவாக்கிட உதவ வேண்டும் என்றும், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இந்த உறுதிப்பாட்டிற்குத் தலைமையேற்க வேண்டும் எனவும் மோடி வலியுறுத்தியிருக்கிறார்.

குழந்தைகளை அவர்களது திறமை மற்றும் விருப்பத்திற்கேற்ற திறனுடையவர்களாக மாற்றுவதில்தான், புதிய கல்விக்கொள்கை முழுக் கவனத்தையும் செலுத்தி வருவதாகவும், இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்றவர்களாக, நம்பிக்கை உடையவர்களாக, நடைமுறைகளுக்கு உகந்தவர்களாக திகழ்வதற்கான அடித்தளத்தை கல்விக்கொள்கை உருவாக்குகிறது என்றும் பிரதமர் மோடி குறிப்பிட்டிருக்கிறார்.

# அக்னிபாத் திட்டத்துக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழு; விளக்கம் அளிக்கவிருக்கிறார் பாதுகாப்பமைச்சர் ராஜ்நாத்சிங்






முப்படைகளிலும் நான்காண்டு ஒப்பந்த அடிப்படையில் வீரர்களைச்சேர்க்கும் அக்னிபாத் திட்டத்தை இந்திய மத்திய அரசு அறிவித்தது. இந்தத் திட்டத்துக்கு எதிராக இந்தியா முழுவதும் போராட்டங்களும், வன்முறைகளும் வெடித்தன. ஆனாலும், இந்தத் திட்டத்தை திரும்பப்பெற முடியாது என இந்திய அரசு உறுதியாக தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை இந்தியாவின் முப்படைகளும் ஆரம்பித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அக்னிபாத் திட்டத்தின் கீழாக இந்தியக் கடற்படையில் சேர சுமார் பத்தாயிரம் பெண்கள் விண்ணப்பித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அக்னிபாத் திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆராயவுள்ள இந்தியப் பாதுகாப்புத் துறைக்கான நாடாளுமன்ற ஆலோசனைக்குழுக் கூட்டம் வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தக் குழுவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, தேசிய மாநாட்டுக் கட்சித்தலைவர் பரூக் அப்துல்லா, திரிணாமுல் காங்கிரஸ் மூத்த தலைவர் சுதீப் பந்தோபாத்யாய் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினரிடம் அக்னிபாத் திட்டம் குறித்து இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் விளக்கம் அளிக்கவிருக்கிறார். அக்னிபாத் திட்டத்தில் வீரர்கள் சேர்ப்பு உள்ளிட்ட சிறப்பு அம்சங்கள் குறித்து அவர் விளக்கம் அளிப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத்துறைச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.



# காமராஜ் மீது சொத்துக் குவிப்பு வழக்கு; எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவிப்பு

அ.தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் காமராஜ் மற்றும் அவரது உறவினர்கள் மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழங்குகள் தொடுக்கப்பட்டுள்ளமைக்கு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கண்டம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளராகவுள்ள எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், அ.தி.மு.கவை அரசியல் ரீதியாக நேரடியாக எதிர்கொள்ள முடியாத தி.மு.க. அரசு, முன்னாள் அமைச்சர் ஆர்.காமராஜ் மீதும் அவரது நண்பர்கள், உறவினர்கள் மீதும் அரசியல் ரீதியில் பழிவாங்கும் நோக்கத்தில் வழக்குப்பதிவு செய்து சோதனை நடத்துவது கண்டிக்கத்தக்கது.

அரசியல் பழிவாங்கும் செயல்களில் ஈடுபடுவதை நிறுத்திவிட்டு மக்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டுமென இந்த அரசை வலியுறுத்துகிறேன், என்று தெரிவித்திருக்கிறார்.




# 171 ஆண்டுகள் பழைமையான அருங்காட்சியகம் புதுப்பிப்பு

சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகம் 1851ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கொல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியகத்துக்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது பழைமையான அருங்காட்சியகம்இதுவாகும்.16.25ஏக்கர்பரப்பளவுள்ள நிலத்தில் 6 கலைமிகு கட்டடங்களுடன் அமைந்துள்ளது. இங்குள்ள 46 காட்சிக் கூடங்களில் தொல்லியல், நாணயவியல், விலங்கியல், இயற்கை அறிவியல், சிற்பம் ஆகிய துறைகளைச் சார்ந்த ஏராளமான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இயற்கை சார் வரலாறு, பண்பாடு சார் வரலாறு ஆகிய இரு துறைகளைச் சார்ந்த பல்வேறு அரும்பொருள்களும் இங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகத்தில் உள்ள கலையரங்கை மேம்படுத்தி கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும், என்று தமிழக சட்டசபையில் அண்மையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி முதற்கட்டமாக இங்குள்ள கலையரங்கத்தின் இருக்கைகளை மாற்றி புதிய இருக்கைகளை அமைக்கதமிழக அரசு முடிவுசெய்துள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பையும் பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ளது.



# கொரோனாக் கட்டுப்பாடுகளை தீவிரமாக்கவேண்டிய அவசியமில்லை

கோயம்புத்தூருக்கு அருகே உள்ள குரும்ப பாளையத்தில் துணை சுகாதார நிலையத்தை தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 95 சதவீதமானோர் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும், 5 சதவீதத்தினர்தான் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது பரவும் கொரோனா வகை வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கிறது என்றாலும், தீவிரமான கட்டுப்பாடுகள் இப்போதைக்குத் தேவையில்லை எனவும் அவர் கூறியுள்ளார். முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும் என்று மட்டுமே அறிவுறுத்தப்பட்டு வருகிறது எனவும், தினமும் எடுக்கப்படும் பரிசோதனையில் 10 சதவீதத்துக்கும் மேல் பாதிப்பு இருந்தாலோ, தொற்றுக் காரணமாக பரிசோதிக்கப்பட்டவர்களில் 40 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டாலோதான், தீவிரமான கொரோனாக் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிவரும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆயிரம் ஏக்கரில் பாசிப் பயறு செய்கை கோமரங்கடவல, மொறவெவ பகுதியில்





(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் ஆலோசனையின் பிரகாரம் கோமரங்கடவல மற்றும் மொறவெவ பிரதேச செயலகப் பிரிவுகளில் அடுத்த பருவத்திற்கு முன்னர் இடைக்காலப் பருவமாக 1,000 ஏக்கரில் பாசிப் பயறு பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. லேக் கிராமம் புபுதுவ திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை திட்டமிடும் விசேட கூட்டம் கிழக்கு மாகாண பிரதமசெயலாளர் துசித பி.வணிகசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதற்குத் தேவையான பச்சை விதைகளை அடுத்த இரண்டு நாள்களுக்குள் விவசாயிகளுக்கு விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டது. நெல் வயலுக்கு அடுத்த பருவத்திற்குத் தேவையான அளவு நைட்ரஜன் கிடைப்பதும் துணைப் பருவமாக பயறுகளை வளர்ப்பதும் இதன் சிறப்பு அம்சமாகும். இதன்போது, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்து பண்டா, மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எம். ஹுசைன், கோமரங்கடவெல மற்றும் மொறவெவ பிரதேச சபையின் தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், அது தொடர்பான திட்ட பணிப்பாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## பெண் பொலிஸுக்கு பாலியல் தொல்லை; பொலிஸ் சாரதி 2 வாரம் விளக்கமறியலில்

### மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸில் சம்பவம்

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்குப் பாலியல் தொல்லை கொடுத்தவர் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தரான பொலிஸ் சாரதியை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை – இரண்டு வாரங்களுக்கு – விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் நேற்று உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் அங்கு சாரதியாக கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தம்மைக் கையைப்பிடித்துப் பாலியல் தொல்லை கொடுத்தார் என மேற்படி பெண் பொலிஸ் உத்தியோகத்தர் குற்றஞ்சாட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொண்டு வந்தமையையடுத்து உடனடியாகசம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரைப் பணியில் இருந்து இடைநிறுத்தியமையுடன், அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனை வழங்கினார் அதையடுத்து அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அம்பாறையைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனக் கூறப்பட்டது.

## காட்டுக்கு விறகு எடுக்கச் சென்றவர் காட்டு யானைத் தாக்குதலில் மரணம்

திருகோணமலை மாவட்டத்தின் வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டு பகுதிக்குள் விறகு எடுக்கச் சென்ற ஒருவரைக் காட்டு யானை தாக்கியதை அடுத்து கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக வான்எல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் டி.டி. ஆரியரத்தின (57 வயது) எனும் 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் எரிவாயு முடிந்த நிலையில் சமைப்பதற்காகக் காட்டுப் பகுதியில் விறகு எடுக்க சென்ற போதே காட்டு யானை இவரைத் தாக்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலம் நேற்று கந்தளாய் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தம்பலகாமம் கல்மெடியாவவில் மரவள்ளி தடிகள் நடும் நிகழ்வு







(ஹஸ்பர்)

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டும் உணவு பற்றாக்குறையை தீர்க்கும் வகையிலும் மரவள்ளி தடி நடும் நிகழ்வு தம்பலகாமம் கல்மெடியாவ வடக்கு கிராம சேவகர் பிரிவில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பயனாளி ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் இடம் பெற்றது.மரவள்ளி கிழங்கு வகைக்கு உகந்த மண் கட்டமைப்பைக் கொண்ட இந்தப் பகுதியில் மரவள்ளி செய்கை ஊக்கவிக்கப்பட்டு வருகிறது. உணவு பஞ்சத்தை போக்கவும் இதனை ஏனையோரும் முன்னெடுத்துச் செல்லவும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் சித்திக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## போரதீவுப்பற்று கல்வி அபிவிருத்தியில் 'கரம் கொடுப்போம் அமைப்பு' இணைவு





(கிருபாகரன்)

பட்டிருப்புக் கல்வி வலயத்திலுள்ள போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்தில் 32 ஆரம்பப் பாடசாலைகளில் 620 மாணவர்கள தரம் 5 இல் கல்வி கற்று வருகின்றனர். இவர்கள் இவ்வருடம் (2022) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயாராகி வருகின்றனர்.

இந்த மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் முகமாக கரம் கொடுப்போம் அமைப்பு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரிக்களை தயாரித்து வழங்குவதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது.

இதன் அடிப்படையில் மாதிரிப் பரீட்சைப் பொதிகளை கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினர்களான யோகராசா ஜெயரூபன், மகேந்திரன் கவிஞன் ஆகியோர் பட்டிருப்பு கல்வி வலயத்தின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எம்.எச்.றியாசா மற்றும் பட்டிருப்பு கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.திவிதரன் ஆகியோரிடம் கையளித்தனர்.

இப் பொதிகள் மாணவர்களைச் சென்றடைவதற்காக பட்டிருப்பு கல்வி வலயத்தின் திட்டமிடலுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பளார் திருமதி.த.இராஜசேகர், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பா.வரதராஜனிடம் ஒப்படைத்தார். இந் நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ரி.இதயகுமார், கே.திருச்செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அடுத்துவரும் மாதங்களில் பணவீக்கம் 70 வீதத்தினால் அதிகரிக்கும் வாய்ப்பு!



## மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கையின் அடிப்படை பணவீக்கம் அடுத்த சில மாதங்களில் 70 வீதம் ஆக உயரக் கூடும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அந்த கணிப்புகளின்படி, 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பணவீக்கம் கணிசமாகக் குறையக்கூடும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை, நாட்டின் வெளிநாட்டு கையிருப்பை பலப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களில் கணிசமான முன்னேற்றம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவிடமிருந்து பெறப்படும் 150 கோடி அமெரிக்க டொலர் பரிவர்த்தனை வசதி உட்பட இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு ஜூன் மாத இறுதிக்குள் 190 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆஸியின் புதிய உயர்ஸ்தானிகராக போல் ஸ்டீபன்ஸ் நியமிக்கப்பட்டார்

இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் புதிய உயர்ஸ்தானிகராக போல் ஸ்டீபன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஆஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் பென்னி வோங்கினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

டேவிட் ஹோலிக்கு பதிலாகவே போல் ஸ்டீபன்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்டீபன்ஸ் இந்தியா மற்றும் இந்து சமுத்திரக் கிளையின் உதவி செயலாளராகவும் பதவி வகித்துள்ளார்.

முன்னதாக அவர், சுவீடன் மற்றும் தாய்லாந்து, பிரேஸிலுக்கான தூதுவராகவும், ஐக்கிய நாடுகள் சபைக்கான ஆஸ்திரேலியாவின் நிரந்தர தூதுவராகவும் பணியாற்றினார்.

இந்தநிலையில், 70 வருடங்களில் இல்லாத மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கைக்கு உதவியளிக்க ஆஸ்திரேலியா உறுதிபூண்டுள்ளது என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய 5 கோடி டொலர்களை இலங்கைக்கு அவசர உணவு மற்றும் சுகாதார தேவைகளைபூர்த்திசெய்யவழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மின்சார வாகன இறக்குமதி உரிமம்!

புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பும் டொலர்களின் பெறுமதிக்கு அமைய மின்சார வாகன இறக்குமதிக்கான உரிமங்களை வழங்குவதற்கு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

மேற்படி பணியாளர்கள் அனுப்பும் டொலரின் பெறுமதிக்கு அமைய அவர்களுக்கு எவ்வாறான வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது என்பது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்ட ரீதியாக பணம் அனுப்பும் அனைவருக்கும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட வேண்டும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது.

குறிப்பாக எரிவாயு மற்றும் எரிபொருளைக் கொள்வனவு செய்வதில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், டொலரை நாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் இலங்கை அரசாங்கம் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# முகாமைத்துவ சேவை அதிகாரிகளுக்கு புதிய நியமனம்

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிகாரிகளைத் தற்காலிகமாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு நியமிக்க பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனைத்து நிறுவன தலைவர்களுக்கும்அறிவித்துள்ளார்எனத்தெரிவிக்கப்படுகின்றது.

நாளாந்தம் கொழும்பு அலுவலகத்துக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் தற்போதைய சூழ்நிலையை வெற்றிகரமாகச் சமாளிக்கும் வகையில் மூன்று மாத காலத்துக்கு முகாமைத்துவ சேவை அதிகாரிகளைத் தற்காலிக அடிப்படையில் நியமிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கமைய பத்தரமுல்லை குடிவரவு திணைக்களத்தின் பிரதான காரியாலயத்திலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் வசிக்கும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களை மூன்று மாத காலத்துக்கு குடிவரவு திணைக்களத்துக்கு நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

பகல் மற்றும் இரவு என இரண்டு நேர அட்டவணை முறையில் பணியாற்ற விரும்பும் உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை அவசர தேவையாகக் கருதி முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கூட்டுச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



# யாழ். போதானாவுக்கு மருந்துகள் அன்பளிப்பு

எஸ்.கே.நாதன் அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்பில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலையில கடந்த புதன்கிழமை வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் நந்தகுமாரிடம், சிவகுமார் மருந்துப் பொருள்களை வழங்கி வைத்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியின் வேண்டுகோளுக்கு அமைய 8 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்து பொருள்களே வழங்கி வைக்கப்பட்டன.

# யாழ். போதனா வைத்தியசாலை பணியாளர்களுக்கு சைக்கிள்கள்



யாழ் போதனா வைத்தியசாலை சுகாதார பணியாளர்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் 10 சைக்கிள்கள் கையளிக்கப்பட்டன.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு சுகாதார பணியாளர்களின் போக்குவரத்தையும் பாதித்துள்ள நிலையில் சைக்கிள்களின் விலைகளும் அதிகரித்து உள்ளன. இந்த நெருக்கடியை தீர்க்கும் முகமாக பிரித்தானிய காரை நலன்புரிச்சங்கத்தினரின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை 10 சைக்கிள்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக கையளிப்பு செய்யப்பட்டன. காரை நலன்புரி சங்கத்தின் சார்பாக உபதலைவர் விநாசித்தம்பி நாகேந்திரம், செயலாளர் பரமநாதர் தவராஜா மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் கந்தசாமி பாலகிருஷ்ணன் ஆகியோர் இந்த கையளிக்கும்நிகழ்வில்கலந்துகொண்டனர். 10சைக்கிள்களையும் பிரதிப் பணிப்பாளர்கள் பவானந்தராஜா, யமுனானந்தா மற்றும் வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தினரும் இணைந்து பெற்றுக்கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2022இல் வெளியிடப்பெற்றது.